# வள்ளுவம் காட்டும் வாழ்வியல் கூறுகள்

முனைவர்ந.செ.கி.சங்கீத்ராதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
தியாகராசர்கல்லூரி, மதுரை-09.
sangeethbala7375@gmail.com

41

**முன்னுரை:**

தமிழர்களின் வாழ்வியலை அகம் , புறம் எனப் படம் பிடித்துக் காட்டியவை சங்கஇலக்கியங்கள். ஆனால் மனிதனை உயர்வான வாழ்விற்கும், தனி மனித ஒழுக்கத்திற்கும், அறச் சிந்தனைக்கும் மேம்படுத்தும் ஆகச்சிறந்த தமிழிலக்கியமாகத் திகழ்வது 'தமிழ்மறை' எனப் போற்றப்படும் திருக்குறளே ஆகும் . பழமையையும் பெருமையையும் மறுமையின் பலனையும் கூறிச்செல்கின்ற இலக்கியங்களுக்கு மத்தியில் நிகழ்வாழ்வின் சிறப்பினை உணர்த்திய உன்னத இலக்கியம் திருக்குறள் . வாழ்க்கையில் பொருளின் இன்றியமையாமையை உணர்த்தியதோடு வாழ்க்கையின் பொருளையும் உலகிற்கு உணர்த்திய இலக்கியம் . "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்ற வள்ளுவரின் வாக்கு உலகினோர்க்கு மகத்தானது . வாழ்வில் நற்காரியங்கள் (அறம்) செய்வதற்கும் உறவுகளோடு மகிழ்ச்சியாக (இன்பம்) இருப்பதற்கும் பொருள் முதன்மையானது என்பதனால்தான் நடுவில் (அறம், பொருள், இன்பம்) பொருளை வைத்துப் போற்றியுள்ளார் வள்ளுவப் பெருமான் . பொருளியல் சார்ந்த வாழ்வியல் கூறுகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பொருளின் சிறப்பு**

இவ்வுலக வாழ்க்கையில் பொருளின் இன்றியமையாமையை வள்ளுவம் எடுத்துக்காட்டியது போல் இதுவரை எவ்விலக்கியமும் எடுத்துக்கூறியதில்லை . இனிமேலும் எவ்விலக்கியமும் கூறப்போவதில்லை எனலாம் . உலகியலில் பொருள் உள்ளவரையே போற்றுவர் . "இல்லானை எல்லோரும் வெறுப்பர். செல்லாது அவன் வாய்ச்சொல்" எனலாம். வல்லான் வகுத்ததே நீதி என்பார் பாரதியார் உலக வாழ்க்கையில் செல்வந்தர் பெறும் மதிப்பினை ஒரு திரைப்படப்படலில் கண்ணதாசன் இங்ஙனம் குறிப்பிடுவார் , 'படித்தவன் சொல்லெல்லாம் சபை யேறுமா ? பணம் படைத்தவன் சொல்லே சபையேறும்' (கண்ணதாசன் திரைப்படப்பாடல் தொகுதி.3, ப.130). வாழ்வில் 'இல்லான்' என்ற சொல் பொருள் இல்லாத வறியவனையே சுட்டும் . 'இல்லானை இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாயும் வேண்டாள் ' (நல்வழி, பா.34) பொருள் இல்லாதவனை கட்டின மனைவி மட்டுமன்றி பெற்ற தாயும் கூட மதிக்கமாட்டாள் இது வாழ்வியல் நடைமுறை இதனை,

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு' (குறள்.752)

அதனால்தான் வள்ளுவப்பெருமான் 'செய்க பொருளை' என ஆணையிடுகிறார். பாரதி, பராசக்தியிடம் நின் கருணை நிதி வேண்டும் என்றான் . அபிராமி பட்டரும் அன்னை அபிராமியிடம் 'தனம் தரும்

கல்வி தரும்' என்று முதலில் இவ்வுலக வாழ்விற்கேற்ற செல்வத்தையே வேண்டுகிறார். பொருள் ஒருவனுக்கு அசைக்க முடியாத வல்லமையைத் தரும் என்பதால்தான் எதிரியின் இறுமாப்பை அறுக்கவல்ல படைக்கருவி பொருள் அன்றி வேறொன்றம் இல்லை என்கிறார் வள்ளுவப்பெருமான்.

“செய்க பொருளைச் செறுநர் செருக்கு அறுக்கம்
எஃகுஅதனில் கூரியது இல்” (குறள்.759)

பாரதியாரும் ' பொருள் இலார் பொருள்செய்தல் முதற்கடன்' (பாரதியார் கவிதைகள், ப.238)பொருள் இல்லாதவரின் முதற் கடமை பொருள் ஈட்டுவதே என்கிறார். மேலும் 'பணத்தினைப் பெருக்கு' (புதிய ஆத்திசூடி, ப.65) என்கிறார். பிறரால் ஒரு பொருளாக மதிக்கப்படாதவரையும் மதிக்கத்தக்கவராகச் செய்யும் பொருள் அல்லாமல் சிறந்த பொருள் ஒன்று இவ்வுலகத்தில் இல்லை என்று உறுதிபடக் கூறுகிறார்.

“பொருள்அல் லாதவரைப் பொருளாகச் செய்யும்
பொருள்அல்லது இல்லை பொருள் (குறள்.751)

இவ்வுலகில் பொருள் உள்ளோரே எல்லோராலும் மதிக்கப்படுகிறார்கள். ஒரு சபையில் செல்வந்தனுக்குரிய மதிப்பு ஏழைக்கு தரப்படுவதில்லை. ஏழை, செல்வந்தன் என்பது அவர்களிடையே உள்ள பொருளை வைத்தே தீர்மானிக்கப்படுகின்றது.

**தீதற்ற பொருள்**

பொருளின் முக்கியத்துவத்தைக் கூறிய வள்ளுவப் பெருமான் இதனையும் கூறுகிறார். அதவாது பொருள் வரும் வழி தீங்கின்றி தூய்மையானதாக இருத்தல் வேண்டும்.

“அறன்ஈனம் இன்பமும் ஈனும் திறன்அறிந்து
தீதுஇன்றி வந்த பொருள்” (குறள்.754)

இதனை தொல்காப்பியமும் குறிப்பிடுகின்றது.

“வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின்” (தொல். புற.வாழ்.1361)

இதில் 'பழிதீர்' என்ற சொற்றொடர் குற்றமற்ற செல்வத்தைக் குறிப்பதாகும். பொருளியல் அறிஞர் டாக்டர் பா .நடராஜன் குறிப்பிடுவது போல், பெருமை தரும் செல்வத்தை எல்வாற்றானும் ஈட்டுக என்று அவர் (வள்ளுவர்) கூறவில்லை. பொருளைச் சேர்ப்பதற்குப் பொருந்தும் நெறிகளை வகுத்தார். பொருள், நல்வாழ்வுக்குக் கருவியேயன்றி அதுவே வாழ்க்கைப் பயனாகாது. வள்ளுவர் கூற்றின்படி அறநெறி வழுவாது பொருளீட்டுதல் வேண்டும்.. வள்ளுவர் பொருள் ஈட்டலை வலியுறுத்தினாரேயன்றிப் பொருள் குவித்தலை விரும்பினாரில்லை. நல்வாழ்வுக்குத் துணையாகும் பொருளை வாழ்க்கையின் முடிந்த குறிக்கோளாகக் கொள்ளுதல் தவறு என்கிறார்". (வள்ளுவர் தந்த பொருளியல், பக்.38)

**வரவுக்கு ஏற்ற செலவு**

இல்லத்தின் (மனையின்) சிறப்பை, மேம்படுத்துவதால்தான் பெண்ணினை மனைவி என்றும் 'இல்லாள்' என்றும் அழைக்கின்றோம். இல்லாள் என்பது பெண்ணிற்கு ஒரு சிறப்பு அடைமொழி . ஆண்களுக்கு அப்படி அல்ல . 'இல்லான்' என்றால் பொருள் இல்லாதவன் எனப்பொருள் . மனையறத்தில் இருக்கக்கூடிய பெண் அதாவது மனைவியானவள் கணவனின் பொருள் ஈட்டும் வழியறிந்து அதற்கேற்ப வாழ்க்கையை நடத்த வேண்டும். அதுவே வளமான வாழ்க்கை. இன்றைய நடைமுறைப்படி கூற வேண்டுமென்றால் , கணவனின் வருவாய் அறிந்து அதற்கேற்ப குடும்பத்தை நிர்வகிக்க வேண்டும். நாட்டு நிர்வாகம் மட்டுமன்றி வீட்டு நிர்வாகம் குறித்தும் வள்ளுவப் பெருமான் சுட்டிச்செல்கிறார்.

'மனைத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை' (குறள்.51)

இதில் இடம்பெற்றுள்ள 'தற்கொண்டான் வளத்தக்கான்' எனும் தொடருக்கு 'கணவன் வருவாய்க்கு ஏற்ப வாழ்பவள்' என்பது பொருள். இதனுடைய விரிவான விளக்கத்தை 'வலியறிதல்' எனும் அதிகாரத்தில் காணலாம். அதில் 'வருவாய் அளவாக இருப்பினும் தீங்கு இல்லை . செலவு மட்டும் விரிந்து செல்லக் கூடாது' என்பது அதன் கருத்து.

'ஆகாறு அளவிட்டிது ஆயினும் கேடுஇல்லை
போகாறு அகலாக் கடை' (குறள்.478)

இதில் 'ஆகாறு' என்பது பொருள் வரும் வழி (வருவாய்). 'போகாறு' என்பது பொருள் போகும் வழி (செலவு) ' வரவுக்கு ஏற்ற செலவு ' எனும் பொருளியல் சிந்தனை இங்கே வெளிப்படுகின்றது . 'விரலுக்கேற்ற வீக்கம்' என்று பேச்சு வழக்கில் கூறுவார்கள் . ' வளவன் ஆயினும் அளவு அறிந்து அழித்துஉண்" (கொன்றை வேந்தன் , பா.81) பெருஞ்செல்வமுடைய சோழ மன்னனே ஆயினும் அளவறிந்து கொடுக்காவிடில் செல்வம் அழிந்துவிடும் . இன்றைய வாழ்க்கைச் சூழலில் பொருள் ஈட்டுவது எவ்வளவு முதன்மையானதோ அதைவிட முதன்மையானது ஈட்டிய பொருளை வீண் செலவின்றி சேர்த்து வைப்பது . வாழ்க்கையில் அத்தியாவசிய செலவு தவிர ஆடம்பரச் செலவு இருக்கக் கூடாது . அது வாழ்வினைச் சிதைத்துவிடும் என்பதற்கு இதைவிடப் பதச்சான்றினைப் பார்க்க முடியாது.

**பொருளின் பயன்:**

பொருளின் பயனே பிறருக்கு உதவுதலேயாகும் . இதனையே ஈதல் இசைபட வாழ்தல் என்கிறார் வள்ளுவர் . இவ்வுலகில் ஒவ்வொரு வேலைக்கும் ஒரு ஊதியம் உண்டு . உயிர்க்கான ஊதியம் எது எனில், ஈதலே என்கிறார் வள்ளுவப்பெருமான்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு" (குறள்.231)

கொடைச்சிறப்போடு வாழ்தலே இசைபட வாழ்தலாகும் . தமிழர்களின் புறவாழ்வில் கொடை முதலிடம் பெறுகின்றது. 'செல்வம்' என்ற சொல்லிற்கான பெயர்க் காரணமே சுவையானது. 'செல்வம்' என்றாலே ஓரிடத்தில் நிலையின்றி சென்று கொண்டிருப்பதால்தான் அதனைச் 'செல்வோம்' - 'செல்வம்' என மருவி அழைக்கின்றனர் எனச் சுவைபடக் கூறுவதுண்டு. இங்கு தலைவியின் தோளில் சாய்ந்திருக்கும் தலைவன் அடைந்த இன்பம் எதைப்போன்று இருந்தது என்றால்,

"தம்மில் இருந்து தமதுபாத்து உண்டாற்றல்
அம்மா அரிவை முயக்கு (குறள்.1107)

அதாவது தலைவியின் தழுவுதல் , தம்முடைய வீட்டில் இருந்து தாம் ஈட்டிய பொருளைப் பகுத்துக் கொடுத்து உண்டாற் போன்றது என்கிறார் வள்ளுவப்பெருமான் . தொல்காப்பியத்தில் 'பாதீடு' என்ற துறையே உண்டு . வெட்சித்திணைக்குரிய பதினான்கு துறைகளில் ஒன்று பாதீடாகும் . 'தந்துநிறை, பாதீடு, உண்டாட்டு, கொடை என வந்த ஈர் ஏழ் வகையிற்று ' ( தொல். புறத்திணையியல்.1007) அதாவது போரில் வெற்றி பெற்றுக் கொண்டு வந்த பொருள்களை அனைவருக்கம் பகிர்ந்துக் கொடுத்தல். எங்கு பகிர்தல் உண்டோ அங்கு பிரிவினைக்கு இடமி;ல்லை என்பது நினைவில் கொள்ள வேண்டிய ஒன்றாகும் . இன்பத்தை எடுத்துக்காட்டும் போதும்கூட அறம்சார்ந்த கருத்துக்களே வள்ளுவர் மனதில் வடம் போடுகின்றன என்பது மனம் கொள்ளத்தக்கதாகும்.
எது தலையாய அறம் எனக் கூறும் வள்ளுவப்பெருமான்,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' (குறள்.322)

வறியவறின் பசியைப் போக்குதலே பொருளினை சேர்த்து வைக்கும் இடம் எனக் கூறியவர் . எல்லாவற்றிற்கும் மேலானது எது என்பதையும் கூறுகிறார் . மனிதனின் பசியைப் போக்குவது மட்டுமல்ல. அனைத்து உயிர்களுக்கும் உணவளித்துக் காப்பதே சான்றோர்கள் கூறியவற்றுள் தலையானது என்கிறார் . 'பகுத்துண்டு' எனும் சொற்றொடர் மனிதனை மனிதநேயமிக்கவனாக நெறிப்படுத்தும் ஆகச்சிறந்த தொடராகும் . 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் ' என்ற வள்ளலாரின் கூற்றில் வள்ளுவத்தின் வழியைக் காணலாம் . பேகன் மயிலுக்கு போர்வை அளித்ததுதம், பாரி முல்லைக்குத் தேர் அளித்ததும் பல்லுயிர் ஓம்புதலின் முன்னத்தியே எனலாம் . அதனால்தான் 'பசுவிற்கு ஓர் வாயுரை ' (திருமந்திரம், பா.252) எனகி;றார் திருமூலர் . இன்றைய 'விலங்குகள் பறவைகள் பாதுகாப்பு சட்டம் ' (டீடரநஉசழளள) மேற்கூறியவற்றின் அடிப்படையே ஆகும்.

**பொருள் சேமிப்பகம்**

வாழ்வில் பொருள் ஈட்டுவது மட்டும் பெருஞ்செயல் அன்று அதனைச் சிதறாமல் சேர்த்து வைப்பதே அரிய செயலாகும். பொருளைச் சேமித்துவைப்பதற்கு எந்த இடத்தை வள்ளுவப் பெருமான் பரிந்துரைக்கிறார் தெரியுமா? ஏழைகளின் வயிறு எனும் வைப்பகம்.

"அற்றார் அழிபசிதீர்த்தல் அஃது ஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி" (குறள்.226)

வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும் . அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் பயன்படுத்துமாறு சேர்த்து வைக்கும் இடமாகும் . அதுவே மிகச் சிறந்த வைப்பகம் ஆகும். 'செல்வத்தின் பயனே ஈதல்' என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. பசிப்பிணி தீர்க்கும் அமுதசுரபி வாயிலாக அறச் சேவை செய்தவள்தான் மணிமேகலை . 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' (மணிமேகலை,பா.85) ஒவ்வொருவருக்கும் எது அழகு எனக் கூறும் நீதி நூலான வெற்றி வேற்கை, 'செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்கதல்' (வெற்றிவேற்கை,பா.3) செல்வந்தருக்கு அழகு தமது சுற்றத்தைப் பொருளுதவியால் காப்பதே என்கிறது . ஆண்டாள் பிராட்டியும் ஏழை எளியவருக்கு உணவிடுதலும் அவர்கள் துன்பம் களைவதுமே முக்தி அடைவதற்கான வழி என்கிறார்.

'ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் காட்டி
உய்யுமாறெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்' (திருப்.2)

'தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம் ' என்றான் பாரதி (பாரதியார் கவிதைகள், ப.260) அதனையே வள்ளுவப் பெருமானும்,

'இரந்து உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்' (குறள்.1062)

பிச்சையெடுத்துத்தான் உயிர்வாழ வேண்டுமென்றால் இவ்வுலகைப் படைத்தவனும் கெட்டழிந்து போகட்டும் என்றார் . எது கொடிது எனக்கூறும் ஔவையும் 'கொடிது கொடிது வறுமை கொடிது ' (ஔவையார், ப.55) என்கிறாள்.

**பயனற்ற பொருள்:**

படைப்பு பல படைத்து பலரோடு உண்ணும் மிகப்பெரும் செல்வந்தரும் பிறருக்கு கொடுத்து உதவாமல் சேமித்து வைத்திருக்கும் செல்வம் எதைப்போன்றது எனில், அழகான இனம்பெண் தனியாக வாழ்ந்து முதுமையுற்றாற் போன்றது என்கிறார் வள்ளுவப்பெருமான்.

"அற்றார்க்கென்று ஆற்றாதென் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று'
(குறள்.1007)

பிறருக்கு கொடுத்து உதவாத செல்வத்தை முதிர்கன்னிக்கு உவமையாகக் கூறியள்ளது நயம். இன்றும் வாழ்வில் கொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ; எத்தனையோ முதிர் கன்னிகளை உருவாக்குகின்றன . பிறருக்கு பய்னபடாத பொருளை முதிர்கன்னிக்கு வள்ளுவப்பெருமான் ஒப்பிட்டது அரிய உவமையும் நயம் கொள்ளத்தக்கதுமாகும்.

**நிறைவுரை:**

தமிழர்களின் அகம் , புறம் வாழ்வியலை எடுத்துக்காட்டும் இலக்கியங்களுக்கு மத்தியில் , அறச்சிந்தனைகளையும், சிறந்த வாழ்வியல் நெறிமுறைகளையும் , உயர்ந்த பண்புநலன்களையும்

உலகிற்கு பறை சாற்றுகின்ற ஒப்பற்ற இலக்கியம் திருக்குறள் . பெருமையும் மறுமையும் மட்டுமல்லாமல் இம்மை வாழ்வு சிறப்புறுவதற்கு மக்கள் ஆற்றவேண்டிய கடமைகளை மிகத் தெளிவாக கட்டமைத்துள்ள இலக்கியம் திருக்குறள் . அவற்றில் முதன்மையாகப் “பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகம் இல்லை “ என்ற கருத்தை உறுதிப்படுத்துகிறார் வள்ளுவப் பெருந்தகை . வாழ்வில் பொருளின் சிறப்பு, அதனைத்தேடும் வழிமுறைகள், அதனைச் சேமிக்கும் இடம், பொருளின் வருவாய்க்கு ஏற்ப செலவு செய்தல் , சேர்த்த பொருள்களின் பயன்பாடு போன்றவற்றை இக்கட்டுரை வாயிலாக அறியமுடிகின்றது.

**துணைசெய்த நூல்கள்:**

1. சுந்தரமூர்த்தி இ.(ப.ஆ), பாரதியார் கவிதைகள், பாவை நிலையம், 1999,சென்னை
2. சொக்கலிங்கம்,சு.ந., (உ.ஆ.), திருப்பாவை,பழனியப்பா பிரதர்ஸ், 2004,சென்னை.
3. தமிழண்ணல் (உ.ஆ.), திருக்குறள், மீனாட்சி நிலையம்,2011, மதுரை.
4. மாணிக்கவாசகன் ஞா., (உ.ஆ.), தொல்காப்பியம் மூலமும் தெளிவுரையும் , உமா பதிப்பகம் , 2006,சென்னை.
5. முருகன் ப. (தொ.ஆ), வள்ளுவம் பன்னோக்குப்பார்வை , நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் , 1995,சென்னை.
6. முரளி ச., (ப.ஆ.), பன்னிரு திருமுறை, சதுரா பதிப்பகம்,2005,சென்னை.
7. மெய்யப்பன் ச.,(ப.ஆ.),நீதிநூல்தெளிவுரை,மணிவாசகர்பதிப்பகம்,2000சென்னை.
8. மோகன் இரா., வழி காட்டும் வள்ளுவம், வானதி பதிப்பகம், 2016,சென்னை.